DEPOSITION OF WITNESS

CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI

O.S. No. 62 /2017

Deposition of Witness : CW1

| | | | |
|---|---|---|---|
| Name | : மகாலட்சுமி | Father's/Husband's Name : | செல்லத்துரை |
| Village | : ஆண்டிபட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : மண்டல துணை வட்டாட்சியர், ஆண்டிபட்டி |
| Religion | : | Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2026

**முதல் விசாரணை :**

1) நான் தற்போதுஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து தாவா சொத்து சம்பந்தமான STR1059-69, dated 16.04.1960, STR No.3910 of 48, dated 26.09.38, STR 309 of 59, dated 06.09.41 ஆகிய கோப்புகளை சமர்ப்பிக்க கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலத்திற்கு சம்மன் அனுப்பப்பட்டு அதன் பேரில் எங்கள் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடிதத்தின்பேரில் நான் சாட்சிய் அளிக்க வந்திருக்கிறேன். சம்மனோடு என்ன ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்கான விளக்கத்தோடு அனுப்பப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அ பதிவேடு நகல் என்றால் சரிதான். ஆண்டிபட்டி தாலுக 1987 ம் ஆண்டு பெரியகுளத்திலிருந்து பிரிக்கப்பட்டது.

2) 1987 க்கு முந்தைய ஆவணங்கள் பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. நான் எங்கள் அலுவலகத்தில் தேடி பார்த்துவிட்டு ஆவணம் இல்லை என்பதற்காகவும் பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை என்பதற்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகம்தனி அலுவலகமாக பிரிக்கப்படும் போது தேனி மாவட்ட செயல்பாட்டில் இல்லை மதுரை மாவட்டமாகத் தான் இருந்தது. மதுரை மாவட்டத்தில் அந்தக் கோப்புகள் இருக்க வாய்ப்பிருக்கிறது. மேலே கோரியுள்ள ஆவணங்கள் தேனி மாவட்ட ஆவண காப்பகத்தில்பராமரிப்பில் இல்லை என்பதற்கு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள் 09.02.2026 ம் தேதியிய்ல

கொடுத்த கடிதத்தின்அசல் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணங்கள் பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகத்திலும் பராமரிப்பில் இல்லை என்பதற்கு பெரியகுளம் வட்டாட்சியர் அவர்கள் 19.02.2026 ம் தேதியில் கொடுத்த கடிதத்தின்அசல் **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணங்கள் ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்திலும் பராமரிப்பில் இல்லை என்பதற்கு ஆண்டிபட்டி வட்டாட்சியர் அவர்கள் 20.02.2026 ம் தேதியில் கொடுத்த கடிதத்தின்அசல் **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்திலிருந்து வந்த சம்மன் மற்றும் மனுதாரர் தரப்பில் கோரிய ஆவணத்தின் நகல் இணைப்புடன் **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open court on 20.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2026.02.20 11:37:17 +0530

District Munsif,

Aundipatti.